A–BRL–M–L–UBNB

TAMIL

Paper–II

(Literature)

Time Allowed : Three Hours

Maximum Marks : 250

QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

Please read each of the following instructions carefully before attempting questions.

Thre are **EIGHT** questions divided in **Two Sections**.

Candidate has to attempt **FIVE** questions in all.

Question no. **1** and **5** are compulsory and out of the remaining, **THREE** are to be attempted choosing at least **ONE** from each section.

The number of marks carried by a question / part is indicated against it.

Answers must be written in **TAMIL**.

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in chronological order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the answer book must be clearly struck off.

SECTION – A

Q.1. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :— **10×5=50**

Q.1(a) புதல்வன் தாய், நாலூர்க் கோசர், உயிர் தவச்சிறிது, ஆரல் பார்க்கும் குருகு ஆகிய தொடர்களைக் குறுந்தொகை கொண்டு விளக்குக. 10

Q.1(b) ஆருயிர் முறைவழிப் படுமென்பதைக் கணியன் பூங்குன்றனார் காட்டுமாறு காட்டுக. 10

Q.1(c) திருக் குறளில் மணற்கேணி, பீலிபெய் சாகாடு, வெள்ளத்தனைய மலர் நீட்டம், இணர் ஊழ்த்தும் நாறா மலர் ஆகியன உவமைகளாகக் கூறப்பெறும் நுட்பத்தை விளக்குக. 10

Q.1(d) கும்பகருணன் வீடணன் அழைப்புக்கு இணங்காத நிலைக்குரிய காரணங்களைக் காட்டுக. 10

Q.1(e) மாணிக்கவாசகர் தம் சிறுமையையும் இறைவன் பெருமையையும் எங்ஙனம் உணர்த்துகின்றார் ? 10

Optional Province · optionalprovince.com

Q.2. **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—**

Q.2(a) குறுந்தொகைப் பாடல்களில் காணப்பெறும் உவமைச் சிறப்பை எடுத்துக்காட்டுகளால் விளக்குக. 15

Q.2(b) சிலப்பதிகார 'வேட்டுவவரி' நிகழ்ச்சிகள் வழி வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகளை எடுத்துரைக்க. 15

Q.2(c) 'செங்கோன்மை' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் அரசனின் ஆட்சி பற்றிக் கூறுவன யாவை ? 20

Q.3. **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—**

Q.3(a) மாங்காட்டு அந்தணன் கோவலனிடம் உனரத்த செய்திகளைக் 'காடு காண் காதை' வழி நின்று கூறுக. 15

Q.3(b) கும்பகருணன் அறவோன் என்பதை அவன் உனரவழி உணர்த்துக. 15

Q.3(c) பாவை நோன்பு நோற்கும் நெறியையும், அதனாற் பெறும் பயன்களையும் திருப்பாவை கொண்டு காட்டுக. 20

Q.4. **பின்வரும் பாடற் பகுதிகள் வரும் இடத்தையும், அவற்றின் பொருட் சிறப்பையும் புலப்படுத்துக :—**

Q.4(a) 'மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே.' 15

Q.4(b) 'பகல் வெல்லும் கூகையைக் காக்கை'. 15

Q.4(c) 'அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய் என் அரும்பொருளே!' 20

SECTION – B

Q.5. **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—** **10×5=50**

Q.5(a) கண்ணம்மாவைக் குழந்தையாகக் காணும் பாரதியின் தாய்மை உள்ளத்தைப் புலப்படுத்துக. 10

Q.5(b) குடும்ப விளக்கில் பாவேந்தர் பாரதிதாசன் முதியோர் காதலை உரைக்குமாறு வரைக. 10

Optional Province · optionalprovince.com

Q.5(c) நீதிமன்றத்தையே விசாரணைக்கு உட்படுத்தும் எளிய மனிதர்களின் உள்ளக் குமுறலைக் கவிஞர் நா. காமராசன் எங்ஙனம் வெளிப் படுத்துகின்றார் ? 10

Q.5(d) அறம் வாழுமா ? என்ற வினாவுக்குப் பேராசிரியர் மு.வ. விடையாகக் கூறும் கருத்துகளை வரைக. 10

Q.5(e) கடந்த காலத்தில் கவிதையின் பாடு பொருள் எப்படி அமைந்தது என அறிஞர் அண்ணா எடுத்துரைக்கின்றார் ? 10

Q.6. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—

Q.6(a) கண்ணனை மானுடத்தின் பல வடிவங்களாகப் புனையும் பாரதியாரின் புதிய நோக்கை எடுத்துரைக்க. 15

Q.6(b) மு. வரதராசனார் இன்றைய சமூக அவலங்களை எங்ஙனம் எடுத்துரைக்கின்றார் ? 15

Q.6(c) தமிழகம் தாழ்ந்து போனதற்குக் காரணங்களாக அறிஞர் அண்ணா காட்டுவன யாவை ? 20

Q.7. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—

Q.7(a) சித்திரப்பாவையில் இடம் பெறும் அண்ணாமலை, ஆனந்தி என்னும் இருவர் பண்பு நலன்களை வரைக. 15

Q.7(b) 'அந்த உயிலின் மரணம்' என்ற சிறுகதை உணர்த்தும் வாழ்க்கை நுட்பங்களை எடுத்துரைக்க. 15

Q.7(c) யாருக்கும் வெட்கமில்லை நாடகம் காட்டும் பிரமிளாவின் அவல வாழ்வுக்குச் சமுதாயமே காரணமாவதைத் தெளிவுறுத்துக. 20

Q.8. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—

Q.8(a) சீர்திருத்தச் சுவடே இல்லாமல் இருந்த பிற்போக்குச் சமுதாயத்தை முத்துப்பட்டன் காட்டுவதை விளக்குக. 15

Q.8(b) தொழிலாளர் பாடல்களின் சிறப்பை மலையருவி கொண்டு காட்டுக. 15

Q.8(c) சிறுவர் உலகம் குறித்த மலையருவிப் பாடல்களின் சிறப்புகளை எடுத்துரைக்க. 20

Optional Province · optionalprovince.com